DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 25 /2023

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சின்னதுரை | Father's/Husband's Name : | வேலுச்சாமி |
| Village | : ராயவேலூர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நானும் பிரதிவாதிகளும் ஒரே ஊரில் தான் இருக்கிறோம் என்றால் சரிதான். தாவா சொத்தை சின்ன வெள்ளை முப்பர் மகன் கமுதி என்பவருக்கு கடந்த 26.09.1977 ஆம் ஆண்டு சின்னமூப்பர் என்பவர் கிரையம் கொடுத்துவிட்டார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை தான் நான் கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். சின்னமூப்பர் கமுதி என்பவர் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் என்னிடம் இருக்கிறதா என்று கேட்டால் நகல் இருக்கிறது. அந்த ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை கமுதி என்பவர் தனது அனுபவ சுவாதீனத்தில் வைத்துக் கொண்டு எனக்கு கிரையம் மட்டும் எழுதி கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் தாவா சொத்தை 23.03.2022 ம் தேதி கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடந்த 13.04.2022 ம் தேதி தாவா சொத்திற்கு செல்லும்போது பிரதிவாதிகள் என்னை தடுத்து விட்டார்கள் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கமுதி என்பவர் தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக கிரையம் எழுதி வாங்கும் ஆவணத்தில் கிரையம் எழுதிக் கொடுப்பவர் சொத்தை கிரையமாக வாங்கியிருந்தால் அந்த கிரைய முன் ஆவணத்தின் விபரங்களை சொல்லி கிரையம் கொடுப்பார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 நான் கிரையம் வாங்கிய ஆவணத்தில் "என் பெயரில் பட்டா ஏற்பட்டு என்னுடைய முழு

சுவாதீன அனுபவத்திலும், புலக்கத்திலும் இருந்துவரும் இதனடியில் கண்ட சொத்துக்களை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

3) மேற்படி ஆவணத்தின் 2 வது பக்கத்தில் மேற்படி பட்டா எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் பட்டா இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் 2 சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி பட்டாவில் உள்ள 2 சொத்துக்களில் ஒரு சொத்தைப் பொறுத்துதான் இந்த ஆவணம் எழுதி கொடுப்பதாக வாசகம் இல்லை என்றால் சரிதான். ஆனால் சர்வே எண் 22/1 கட்டுப்பட்ட சொத்தை தான் எழுதிக் கொடுத்திருக்கிறார். மேற்படி பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.8/6 ல் கட்டுப்பட்ட நிலமானது பழைய கோட்டை பாலக்கோம்பை கிராமத்திற்கு உட்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பாலக்கோம்பை கிராமத்தில் உள்ளது.

4) மேற்படி சர்வே எண்.8/6 ல் கட்டுப்பட்ட நிலம் தாவா சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது, எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று கேட்டால் வடகிழக்கு பக்கம் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் நான் கிரையம் வாங்கியுள்ள சொத்திற்கு மேற்கு மாலாக முத்து மூப்பர் வகையறா நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முத்து மூப்பர் தான் இந்த பிரதிவாதிகளுடைய தாத்தா என்றால் சரிதான், அம்மாவை பெற்ற அப்பா. தாவா சொத்தின் வடக்கு பக்கம் ஓடை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டா பெற நான் எப்போது விண்ணப்பம் செய்தேன் என்று கேட்டால் விண்ணப்பம் செய்யவில்லை, பத்திரம் பதிவு செய்த ஒரு மணி நேரத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. அதேபோல் வா.சா.ஆ.3 அ பதிவேடு நான் கிரையம் முடித்த தேதியே என் பெயருக்கு மாற்றம் செய்து வந்துவிட்டது.

5) 40 வருடங்களுக்கு முன்பு பழையக் கோட்டையும் பாலக்கோம்பை கிராமமும் ஒரே Revenue village ஆக இருந்தது என்றால் சரியல்ல. அது Group Village ஆக இருந்தது. அந்த இரு கிராமத்திற்கும் ஒரே கிராம நிர்வாக அலுவலர் இருந்தார் என்றால் சில காலகட்டத்தில் இருந்தார். பழையக் கோட்டை மற்றும் பாலக்கோம்பை இரண்டும் ஒரே Revenue village ஆக இருந்தது என்று சொன்னாலும் தற்போது ஏற்பட்டுள்ள பெயர் மாற்றத்தை பயன்படுத்தி கொண்டு நான் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5 புலப்படத்தில் சர்வே எண்.22/1 ல் எவ்வளவு

விஸ்தீரணம் நிலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.22/1 என்ற உட்பிரிவு உள்ளது என்றாலும் ஆனால் அதன் விஸ்தீரணம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.6 பட்டா எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால்சர்வே எண்.22/1ன் மேற்கு மாலில் உள்ள நிலத்தை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளோம். மேற்படி பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள 5 நபர்களும் பிரதிவாதிகளின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் கட்டுப்பட்ட நிலம் பாலக்கோம்பை கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் கட்டுப்பட்ட சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள தாவா சொத்தானது சர்வே எண்.22/1ல் கட்டுப்பட்ட நிலமும் தற்போது பாலக்கோம்பை கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்தானது பழையக்கோட்டை பாலக்கோம்பை என்று கிராமத்தில் தான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தும், O.S.No.24/2019ல் உள்ள சொத்தும் ஒரே சொத்து என்று சொன்னால் சரியல்ல, வேறுவேறு.

7) வா.சா.ஆ.8 பட்டாவில் உள்ள சொத்து, தாவா சொத்தின் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. O.S.No.24/2019 வழக்கில் உள்ள சொத்திலும் தாவா சொத்தின் கிழக்கு மாலாக சிவனாண்டி இடம் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, மேற்கு பக்க மாலாக காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 பட்டாவில் உள்ள சொத்து, தாவா சொத்தின் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. மேற்படி பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள சின்னம்மாள் என்பவர் பிரதிவாதிகளுக்கு ரத்த சொந்தம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள மற்ற நபர்கள் அவருக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 வாதிகளின் பிராது சொத்தின் நான்குமால் தெற்கு வாசி என்று எனதுநிரூபண வாக்குமுலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) வா.சா.ஆ.12 O.S.24/2019ல் ஏற்பட்ட Exparte Decree என்றால் சரிதான். மேற்படி வழக்கு எனது கிரைய முன் பாத்தியஸ்தரான கமுதி என்பவர் மீது பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் தாவா சொத்து பிரதிவாதிகளுக்குபாத்தியப்பட்ட சொத்து என்று விளம்புகை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் சொத்து விபரத்தில் தேனி மாவட்டம் பெரியகுளம் ரெஜிஸ்ட்ரி, ஆண்டிபட்டி சப்டிவிஷன் பாலக்கோம்பை கிராமம் பழைய கோட்டை புல சர்வே எண்.22/1 சென்ட் 50 நிலத்திற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். வா.சா.ஆ.13 முதல் 19 வரையுள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரிதான். ஆனால் வழக்கிற்கு சம்மந்தமான ஆவணங்கள். வா.சா.ஆ.20 ஆவணத்தின் அடிப்படையில் தான் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

9) வா.சா.ஆ.21 பிரதிவாதிகள் சொத்தின் மூல பத்திரம் என்றால் சரியல்ல. ராமன் செட்டியார் என்பவர் ஒச்சம்மாள் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம். ஒச்சம்மாள் யார் என்று கேட்டால் (சாட்சி முதலில் யார் என்று தெரியாது என சொன்னார்) பிறகு ஆண்டித்தேவர் என்ற வெள்ளைச்சாமி தேவரின் மனைவி என்று சொன்னார். மேற்படி வா.சா.ஆ.21 ஆவணத்தில் சொத்து விபரமாக "பாலகோம்பை பஞ்சாயத்து மதுரை டிஸ்ட்ரிக்ட், ஆண்டிப்பட்டி சப் டிவிஷன் பாலக்கோம்பை கிராமம் பழைய கோட்டை புலம் பழைய சர்வே நம்பர் 218 செண்டு 51 புது சர்வே எண். 22/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்". மேற்படி சொத்தை கிரையம் பெற்ற ஒச்சம்மாள் 2ம் பிரதிவாதி தங்க கொடிக்கு உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றால் O.S.24/2019 ல் அவ்வாறு ஒரு பதிவில்லாத உயில் ஆவணத்தை பார்த்திருக்கிறேன், ஆனால் அது உண்மையானதா என்று எனக்கு தெரியாது.

10) வா.சா.ஆ.22 என் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணத்தில் என் மீது பிரிவு 447 இ.த.ச–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.23 வில்லங்கச் சான்றிதழ் 1997 முதல் 2022 வரை உள்ள காலத்திற்கு தான் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்க. அதற்கு முந்தைய காலத்திற்கு எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். 1997 ஆண்டுக்கு முன்பு வில்லங்கச் சான்றிதழை தாக்கல் செய்தால் தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் 1997 ஆண்டுக்கு முந்தைய வில்லங்கச் சான்றிதழ் கோரி நான் சார்பதிவாளர் அலுவலத்தில் மனு செய்யவில்லை என்றால் சரிதான்.

11) நான் அந்த 1997 முந்தைய காலகட்டத்திற்கான வில்லங்க சான் றுகோரி மனு தாக்கல் செய்தேன் என்றாலும் அதில் எனது வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதற்காக பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து உள்ளேன் என்றால் O.S.No. 24/19 இல் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் எனது சொத்தை அவர்கள் சொத்து என்று

கூறுவதால் செய்திருக்கிறேன். மேற்படி O.S.No.24/19 என்ற வழக்கிலும் நான் மனு செய்து என்னை தரப்பினராக சேர்க்க கோரி மனு செய்து அதுவும் அனுமதிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் கமுதி தான் கட்சி செய்து வருகிறார் என்றால் கமுதி இறந்து விட்டதால் அவர் மகன் கட்சி செய்து வருகிறார். அந்த வழக்கில் உள்ள சொத்திற்கும், எனது சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

12) ஆனால் அந்த வழக்கிலும் என்னை தரப்பினராக சேர்த்துக்கொள்ள மனு செய்து அனுமதிக்கப்பட்டு நான் வழக்காடி வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் உள்ள சொத்திற்கு எனக்கு சம்பந்தமில்லாத போதும் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்க மனு செய்து வழக்காடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கமுதியின் வாரிசுகளை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை நானும் எனது சகோதரர் அன்பரசன் சேர்ந்து தாக்கல் செய்திருக்கிறோம். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் உள்ள சொத்தை O.S.No. 24/19 என்ற வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட பிறகு தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும்போதே O.S.24/2019 என்ற வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட விபரம் தெரியுமா என்று கேட்டால் பத்திரம் பதிவு செய்யும் போது எனக்கு தெரியாது. 1 மாதம் கழித்து தெரியும்.

13) மேற்படி வழக்கு விபரம் தெரிந்த பிறகு கமுதியிடம் அது குறித்து எதுவும் கேட்டேனா என்றால் எதுவும் கேட்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் " மேற்படி கிரைய சொத்தைப் பொறுத்து முன்னால் எந்தவிதமான வில்லங்க விவகாரங்களும் கிடையாது என்று இதன்மூலம் தாங்கள் நம்பும்படி உறுதிமொழி கூறுகிறேன். ஏதேனும் இருந்து பின்னால் வெளியானால் நானே முன்னின்று தீர்த்துக்கொடுப்பதுடன் அதனால் தங்களுக்கு ஏற்படக்கூடிய சகல செலவுகள் நஷ்டங்கள் அனைத்திற்கும் என்னிடமும், என் வாரிசுகள் மூலமாகவும், வசூல் செய்து கொள்ள தங்களுக்கு முழு உரிமை உண்டு என்று உத்தரவாதமளிக்கிறேன்" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்கிரையம் வாங்கி யசொத்தில் தான் பிரதிவாதிகள் வில்லங்கம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

14) எனக்கு கைகிரைய் கொடுத்த நபர்களிடமோ அல்லது அவர்களது வாரிசுகளுக்கு எதிராக தான் நான் பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோர எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகளின் அனுபத்திலிருந்து

மீட்டு (Recovery of Possession) தர வேண்டும் என்று எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. தாவா புலத்தில் 51 செண்ட் நிலம் தான் உள்ளது என்றாலும் நான் இந்த வழக்கில் 73 செண்டுக்காக வழக்கு தாக்கல் செய்து வழக்கின் போக்கை மாற்ற இந்த வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

15) நானும் எனது சகோதரரும் சேர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என் தம்பி 2ம் வாதி தற்போது எங்கிருக்கிறார் என்று கேட்டால் 1 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார், தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் வேண்டுமென்றே எனது தம்பி இறந்த விபரத்தை நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் மறைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு பொய்யானது என்பதால் தான் எனது தம்பி இறந்த விபரத்தை நீதிமன்றத்தில்மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் இறந்த விபரத்தை மறைத்து நான் வழக்காடுவதால் என் மீது குற்ற நடவடிக்கை எடுக்கலாம் என்றால் நான் நீதிமன்றத்தை ஏமாற்றவில்லை. நானாக முன் வந்து இன்றுவரை என் தம்பி இறந்த விபரத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

16) இந்த குறுக்குவிசாரணையின் போது பிரதிவாதிகள் தரப்பு கேள்வி கேட்ட பிறகு தான் எனது தம்பி இறந்த விபரத்தை தெரிவிக்கிறேன் என்றால் சரிதான். இதுவே ஒரு குற்ற செயல் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய நிலத்திற்கு தெற்கு பக்கம் மாயிருளன் மகன் வழக்கறிஞர் சின்னக்கண்ணன் நிலம் இருக்கிறது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தை கடந்த 08.07.2025ம் தேதி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் முதல் பத்தியில் இந்த நிரூபண வாக்குமூலத்தை எனக்காகவும் எனது தம்பிக்காகவும் தாக்கல் செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 07.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.07 12:41:32 +0530

District Munsif,

Aundipatti.